'மார்க்கத்தை எல்லை மீறி பின்பற்றுவோருக்கு (தீவிரமானோர்)அழிவு உண்டாகட்டுமாக

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் அவர்கள் கூறினார்கள் : 'மார்க்கத்தை எல்லை மீறி பின்பற்றுவோருக்கு (தீவிரமானோர்)அழிவு உண்டாகட்டுமாக' இவ்வாறு மூன்று முறை கூறினார்கள். [ஸஹீஹானது-சரியானது] [இதனை முஸ்லிம் பதிவு செய்துள்ளார்]

எவ்வித சரியான வழிகாட்டலோ அறிவோ இன்றி மார்க்கத்திலும் உலக விவகாரங்களிலும், வார்த்தை மற்றும் செயல்களிலும் தீவிரமாகவும் கடுமையாகவும் நடந்துகொள்வோரின் கைசேதம் மற்றும் அழிவு பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இந்த ஹதீஸில் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் நபியவர்கள் கொண்டுவந்த ஷரீஆ வரம்புகளை மீறி நடந்தோர்களாவர்.

https://sunnah.global/hadeeth/ta/show/3420